# வல்வெட்டித்துறை நகரசபை
## அறுபதாவது சபை அமர்வு – 29.11.2022

நகர சபையின் அறுபதாவது அமர்வு சபை மண்டபத்தில் **29.11.2022 செவ்வாய்க்க்கிழமை மு.ப 9.30** மணியளவில் தவிசாளர் திரு.இ.சுரேன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு சமூகமளித்தோர்.

1. திரு.இராமச்சந்திரன் சுரேன் - கௌரவ தவிசாளர்.
2. திரு.குகதாஸ் கமலதாஸ் - கௌரவ உறுப்பினர்.
3. திரு.தங்கவேலாயுதம் சுந்தரலிங்கம் - கௌரவ உபதவிசாளர்.
4. திரு.முருகுப்பிள்ளை ஆனந்தராசா - கௌரவ உறுப்பினர்.
5. திரு.செந்திவேல் தமிழினியன் கௌரவ உறுப்பினர்.
6. திரு.அருமைரத்தினம் சதீஸ்வரன் - கௌரவ உறுப்பினர்
7. திரு.சபாரத்தினம் செல்வேந்திரா - கௌரவ உறுப்பினர்.
8. திரு.சண்முகம்பிள்ளை சண்முகதாஸ் - கௌரவ உறுப்பினர்.
9. திருமதி சுந்தரேஸ்வரி கவிஞன் - கௌரவ உறுப்பினர்.
10. திரு.கந்தசாமி சதீஸ் - கௌரவ உறுப்பினர்.
11. திரு.ஆறுமுகம் ஞானேந்திரன் - கௌரவ உறுப்பினர்.
12. திரு.மகாலிங்கம் மயூரன் கௌரவ உறுப்பினர்.
13. திருமதி.இந்திரன் கைலாஜினி - கௌரவ உறுப்பினர்.
14. திரு.பாலச்சந்திரன் ஜெகன் - கௌரவ உறுப்பினர்.
15. திரு.துரைராசா ஸ்ரீதரன் - கௌரவ உறுப்பினர்.
16. திருமதி.இராஜேஸ்வரி குணரத்தினம் - கௌரவ உறுப்பினர்.
17. திருமதி அன்ரநற் சுபாசினி இமானுவல் சிறில் ஜெயராசா – கௌரவ உறுப்பினர்.

மௌன வணக்கத்துடன் சபை அமர்வை ஆரம்பித்த தவிசாளர், முதலில் சென்ற கூட்ட அறிக்கைகளை அங்கீகரிப்பதில், 28.09.2022 ஆந் திகதி நடைபெற்ற 58 ஆவது சபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் தவிசாளர் சபையை கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் ஏதுமற்ற நிலையில் கூட்டக்குறிப்பானது உறுப்பினர் திரு.அ.சதீஸ்வரன் முன்மொழிய உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸ் வழிமொழிய கூட்டக்குறிப்பானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து 21.10.2022 ஆந் திகதி நடைபெற்ற 59 ஆவது சபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் தவிசாளர் சபையை கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் ஏதுமற்ற நிலையில் கூட்டக்குறிப்பானது உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் முன்மொழிய உறுப்பினர் திரு.அ.சதீஸ்வரன் வழிமொழிய கூட்டக்குறிப்பானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து 16.11.2022 ஆந் திகதி நடைபெற்ற 47 ஆவது விசேடசபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் தவிசாளர் சபையை கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் ஏதுமற்ற நிலையில் கூட்டக்குறிப்பானது உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசா முன்மொழிய உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிய கூட்டக்குறிப்பானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**அடுத்**து தவிசாளரின் விசேட அறிவித்தலில் தொண்டைமானாறு திண்மக்கழிவகற்றல் பிரதேசத்திற்குரிய காணியானது நீண்ட காலமாக நகராட்சிமன்றத்தின் பயன்பாட்டிற்குரியதாக காணப்படுவதனால் அக்காணியினுள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற போது அக்காணியின் உரிமை தொடர்பான தேவைப்பாடு காணப்படுகின்றது. எனவே அப்பிரதேசத்தினை நகராட்சிமன்றத்தினால் சுவீகரிப்பு செய்வது தொடர்பாக சபையில் ஆராயப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் காணப்படுகின்ற மயானங்களுக்கான குழுக்களை அமைத்தலும் அவற்றுக்கான கட்டணங்களை அறவிடலும் தொடர்பாக ஆராயப்பட்ட போது, அந்தந்த பிரதேசத்தினை சார்ந்த மக்கள் மற்றும் கிராமசேவகர், சனசமூக நிலையங்கள் போன்றவற்றுடன் கலந்துரையாடி மயானங்களுக்கான குழுக்களை அமைப்பதுடன் மயானங்களுக்கான கட்டணங்களை அறவிடுதல் தொடர்பாகவும் தீர்மானிக்கலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை மீன்சந்தை மற்றும் மரக்கறிச்சந்தைகளுக்கான குத்தகை தொகை 10% இனால் அதிகரிக்கப்பட்டமையினால் அங்கு **6’** நீளமும், **3’** அகலமும் கொண்ட பரப்பளவுள்ள ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அறவிடப்படுகின்ற வாடகைத்தொகையினை **10%** ஆல் அதிகரிப்பதுடன், அங்குள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்படுகின்ற வாகனங்களுக்கும் கட்டணங்களை அதிகரித்து அறவிடலாமென சபையினால் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து நகராட்சிமன்றத்தில் ஒப்பந்த அடிப்படையில் சனசமூக நிலையங்களினூடாக கூறுவிலை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வெளிவாரி பணியாளர்களின் ஒப்பந்த காலமானது எதிர்வரும் 2022.12.31 ஆந் திகதியுடன் முடிவடைவதனால் 2023 ஆம் ஆண்டிற்கும் தற்போதைய பொருளாதார மற்றும் எரிபொருள் பிரச்சனைகளை கருத்தில் கொண்டு சபைக்கு மேலதிகமான செலவீனத்தை ஏற்படுத்தாது கடந்த காலத்தைப் போன்று இம்முறையும் சனசமூக நிலையங்களிடமிருந்து வெளிவாரி பணியாளர்களிற்கான கூறுவிலையினை கோருவதற்கு அனுமதி வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையினால் எரிபொருளின் விலை அதிகரிப்பினை கருத்திற்கொண்டு ஆதன வரிக்கான K form விநியோகிப்பதற்கான கொடுப்பனவுத் தொகையை ரூபா 25.00 ஆக அதிகரிக்கக் கோரிய நடுக்கட்டு உத்தியோகத்தரின் கோரிக்கைக்கமைவாக K form விநியோகித்தல் கட்டணத்தினை ரூபா 5.00 இலிருந்து 20.00 ரூபாவாக அதிகரிப்பதற்கு அனுமதியளிப்பதெனவும் அதற்கான அனுமதியை உரிய படிமுறைக்கு ஊடாக கௌரவ ஆளுநரிடம் பெற்று நடைமுறைப்படுத்துவதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து பொலிகண்டி மீன் வாடிகளில் வெளியிடத்திலிருந்து வருகின்ற மீன்களை எடுத்து விற்பதனால் அத்துறை சார்ந்த மீனவர்கள் பாதிக்கப்படுவதாக முறைப்பாடு செய்துள்ளமை தொடர்பாக தவிசாளரால் சபைக்கு தெரிவிக்கப்பட்ட போது, அவர்கள் அம்மீன்களை மலிவாக விற்பதனால் மக்கள் நன்மையடைகிறார்கள் என உறுப்பினர் திரு.க.சதீஸால் குறிப்பிடப்பட்டது. வாடிகளில் வெளியிடத்து மீன்களை விற்பதற்கு தடை விதிப்பதுடன் அவர்கள் அம்மீன்களை மீன்சந்தையில் வைத்து விற்பனை செய்வதற்கான அனுமதியனை வழங்கலாமென உறுப்பினர் திருமதி.இ.கைலாஜினியால் குறிப்பிடப்பட்ட விடயம் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

LDSP திட்டத்தின் கீழ் 30 மில்லியன் தொடக்கம் 40 மில்லியன் வரையில் நகரசபைக்கு சொந்தமான நிலங்களில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்டங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி திணைக்களத்தினால் கோரப்பட்டமைக்கு அமைவாக தொண்டைமானாறு திண்மக்கழிவகற்றல் பிரதேசத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு ஏதுவாக களஞ்சிய அறை மற்றும், உற்பத்தி தொடர்பான வேலைகளைச் செய்வதற்கு கட்டடத் தொகுதி ஒன்றினை அமைத்தலும் மற்றும், வல்வெட்டித்துறை நீச்சல் தடாக வளாகத்தில் கடைத்தொகுதி ஒன்றினை அமைத்தல், முன்பள்ளி சிறார்களிற்கான சத்துணவு வழங்குதல், வல்வெட்டித்துறை மீன்சந்தையின் ஒரு பகுதியில் குளிரூட்டல் அறை அமைத்தல் போன்ற திட்டமிடல் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்குரிய அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து, வல்வெட்டித்துறை மாட்டிறைச்சி கடையினை சுகாதார நடைமுறைகளுக்கமைவாக இயக்குவதன் பொருட்டு வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்கு உடைமையாக கொல்களம் இல்லாததால் மாட்டிறைச்சி கடையினை இயக்குதல் தொடர்ச்சியாக பருத்தித்துறை மருத்துவ அதிகாரியால் (MOH) கேள்விக்குட்படுத்தப்படுகின்ற விடயம் தொடர்பாக சபையில் ஆராயப்பட்டு கரவெட்டி பிரதேச சபையின் கொல்களத்தினை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தினை அவர்களுடன் மேற்கொள்வதற்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து Village Hotel தொடர்பாக சென்ற சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட படி வருமான வரிப்பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரின் அறிக்கை மற்றும் செயலாளரின் அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட போது உறுப்பினர்களின் வாதப்பிரதிவாதங்களின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், குறித்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வியாபார அனுமதியினை வழங்கலாமெனவும், அதற்கான பதிலை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டுமெனவும், அதன் பின் தொடர்நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட கோழியிறைச்சி மற்றும் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு குத்தகை அறவீட்டிற்கு மேலதிகமாக மாதாந்த வாடகையாக ரூபா 100.00 இனை அறவிட்டுக் கொள்வதற்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து 59ஆவது சபைக்கூட்டத்தின் 1206/21.10.2022 ஆம் இலக்க தீர்மானத்தின் படி, நந்தவனம் கடைத்தொகுதியின் மாதவாடகை வேறுபாடு தொடர்பாக விளக்கம் கோரி அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிய கடிதம் தொடர்பான பதிலானது அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டு அதில் பழைய பெறுமதியே மாதவாடகையாக (ரூபா 28,300.00 இனை) அறவிடும் படி குறிப்பிடப்பட்டுள்ளமையினால் அப்பெறுமதியினையே அறவிடுவதென சபையினால் தீர்மானிக்கப்பட்டதுடன், வாடகைப்பெறுமதி மாற்றங்களுக்கான விளக்கத்தினை தரும்படி மீள கடிதம் அனுப்ப வேண்டுமென உறுப்பினர் திருமதி.இ.அன்ரநற் சுபாசினியாலும், உறுப்பினர் திரு.ம.மயூரனாலும் வலியுறுத்தப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக்கிளையின் சம்பளக்கணக்கினை தற்காலிகமாக நிறுத்தியிருப்பதனாலும், எமது மக்களின் வரிப்பணமானது எமது மக்களுக்கு சேவை வழங்கலில் ஈடுபடுகின்ற நிறுவனத்திற்கே நன்மை பயப்பதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் இலங்கை வங்கியின் நெல்லியடிக்கிளையிலுள்ள நிலையான வைப்புக்களை பொருத்தமான நடைமுறைகளிற்கேற்ப தேவையேற்படும் பட்சத்தில் இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறைக்கிளைக்கு மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் 2023 ஆம் ஆண்டிற்கான வரி மற்றும் உரிமங்களுக்கான கட்டணங்களை அதிகரித்து அறவிடுதல் தொடர்பாக சபையில் ஆராயப்பட்டு கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டதுடன், அவற்றை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான அனுமதியினை வழங்குவதெனவும் தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி வார நிகழ்வினை எதிர்வரும் 2022.12.21 அல்லது 2022.12.23 ஆந் திகதிகளில் பொருத்தமான தினத்தில் நடாத்துவதுடன் பிரதம விருந்தினராக முன்னாள் செயலாளர் திரு.ச.பிரசாத் அவர்களை அழைப்பதெனவும் தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பிரதேசங்களின் திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளை விரைவாக முன்னெடுக்கின்ற நோக்கோடு, நகராட்சி மன்றத்தினால் புதிய உழவு இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குவதென தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் சேர்க்கப்பட்டு சபைநிதியில் நிதிக்கிடைப்பனவுகளுக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் திட்டமிடல் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து கௌரவ ஆளுநரின் கோரிக்கைக்கமைவாக அவரிடத்தே சபையின் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட வேண்டிய சபையின் தேவைப்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக எழுத்து மூலம் மூன்று நாட்களுக்குள் சமர்ப்பிக்கும் படி தவிசாளரால் சபைக்கு தெரிவிக்கப்பட்டது.

அடுத்து **28.11.2022** ஆந் திகதி நடைபெற்ற **திட்டமிடற்குழுக் கூட்ட சிபார்சுகள்** ஆராயப்பட்டு அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **15.11.2022** ஆந் திகதி நடைபெற்ற **நிதிக்குழுக் கூட்ட சிபார்சுகள்** ஆராயப்பட்டு அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **சபைக்கு அறிவிக்க வேண்டிய விடயங்கள்** தொடர்பில் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டு தேவையான விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **பிற விடயங்கள்** தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- ✓ நான்காம் வட்டாரத்தில் வீதிகளுக்கு பெயர்ப்பலகையிடலில் கொச்சன்காடு வீதி என்பது உந்துவத்தை வீதி என பலகையிடப்பட்டுள்ளது. உந்துவத்தை வீதி பொலிகண்டியிலுள்ளது என உறுப்பினர் திருமதி.இ.அன்ரநற் சுபாசினியால் குறிப்பிடப்பட்டது. பழைய பொலிஸ்ரேசன் வீதியானது கம்பன்செட்டி வீதி என்ற பதிவிலிருப்பதனால் கம்பன் செட்டி வீதி என குறிப்பிட்டு பக்கத்தில் பழைய பொலிஸ்ரேசன் வீதி என்பதனை குறிப்பிடுமாறு தாம் அறிவுறுத்தியதாகவும், அவ்வாறு குறிப்பிட்டாலே மக்களுக்கு குழப்பம் ஏற்படாதெனவும் உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரனால் குறிப்பிடப்பட்டது. பதிவேடுகளை சரிபார்த்து நடவடிக்கை எடுப்பதாக தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.
- ✓ ஐயாயிரம் மரக்கன்றுகளை நாட்டுகின்ற திட்டம் தொடர்பாக உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை அதற்கான விளம்பரம் மாத்திரமே தெரியப்படுத்தப்பட்டிருந்தது என உறுப்பினர் திருமதி.இ.அன்ரநற் சுபாசினியால் குறிப்பிடப்பட்டதற்கு உறுப்பினர்களுக்கு வட்ஸ்அப் குழுவில் தெரியப்படுத்தியிருப்பதாக தவிசாளரால் குறிப்பிடப்பட்டது. எந்த விடயமாயினும் உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தியே மேற்கொள்ள வேண்டுமென

உறுப்பினர் திருமதி.இ.அன்ரநற் சுபாசினியால் குறிப்பிடப்பட்டமை ஏனைய உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ✓ ஆதிகோவிலடி வடிகாலடிப்பு வேலைத்திட்டத்தினையும் கவனத்திலெடுக்குமாறு உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கத்தால் குறிப்பிடப்பட்டது.
- ✓ வீதிகளுக்கு பெயர்ப்பலகையிடல் நடவடிக்கையினை தமது சிபாரிசின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுவதாக நடுக்கட்டு உத்தியோகத்தர் மக்களுக்கு தவறாக பரப்புரை செய்து வருவது கண்டிக்கத்தக்க விடயமெனவும், இது சபைத்தீர்மானத்திற்கமைவாகவே மேற்கொள்ளப்பட்டதென உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரனால் குறிப்பிடப்பட்டது.
- ✓ வல்வெட்டித்துறை மரக்கறிச்சந்தையினை ஒழுங்குபடுத்த வேண்டுமெனவும அங்கு வியாபாரிகள் முன்னுக்கு வைத்து வியாபாரம் செய்வதனால் மக்கள் நின்று பொருட்களை வாங்குவதற்கான இடவசதி போதாமலிருக்கின்றது. அத்துடன் வாசல் படியும் உடைந்து காணப்படுவதாகவும், உறுப்பினர் திரு.பா.ஜெகனால் குறிப்பிடப்பட்டதற்கு அதற்கான நடவடிக்கைகளை அடுத்தவருடம் செயற்படுத்துவதாக தவிசாளரால் குறிப்பிடப்பட்டது.

இறுதியாக தவிசாளரின் நன்றியுடன் முற்பகல் 11.25 மணியளவில் சபை அமர்வு நிறைவுபெற்றது.

**தீர்மான இல :1213/29.11.2022**

**ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ. இல | உ..சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1 | எஸ்.நாகலிங்கம் | இடர்கடன் வழங்கும் வகையில் | 176,000.00 |
| 2 | 2 | ஜெ.ஜெயசீலன் | இடர்கடன் வழங்கும் வகையில் | 199,150.00 |
| 3 | 3 | எஸ்.லிங்கேஸ்வரன் | இடர்கடன் வழங்கும் வகையில் | 188,557.50 |
| 4 | 4 | Tractor Spares | HI – 6315 இலக்க வாகனத் திருத்தத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 425,225.00 |
| 5 | 5 | பொது முகாமையாளர், MPCS, பருத்தித்துறை | 2022 நவம்பர் மாதம் சபை வாகனங்களிற்கு எரிபொருள் நிரப்பியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 300,000.00 |
| 6 | 6 | Ark Enterprises | CDLG திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான (Blower Bucket – 40, Hand Sprayer 01L – 40, Rack – 40, Hose Pipe 50’ – 40) கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 560,000.00 |
| 7 | 7 | Murali Building & Civil Construction | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 திட்டத்தின் கீழ் தீருவில் சுற்று மதில் அமைத்தல் வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,176,273.25 |
| 8 | 8 | Kanagaratnam Construction | LDSP வேலைத்திட்டத்தின் கீழ் தொண்டமானாறு திண்மக்கழிவகற்றல் களஞ்சிய அறை அமைத்தல் வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 679,051.00 |
| 9 | 9 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 20 உத்தியோகத்தர்களுக்கு விழா முற்பணம் வழங்கும் வகையில் | 200,000.00 |

முன்மொழிந்தவர் : திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர் : திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1214/29.11.2022**

**ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ.இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| **01** | October 01 | எஸ்.மோகனசுந்தரம் | 01.09.2022 – 30.09.2022 வரை பத்திரிகைகள், சஞ்சிகைகள் கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 10,520.00 |
| **02** | October 02 | இ.சுரேனும் மறுபேரும் | தவிசாளர், துணைத்தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான 2022 செப்ரெம்பர் மாதத்திற்குரிய தொலைபேசி கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 25,500.00 |
| **03** | October 03 | Managing Director, Sundra Security Plus Cleaning (Pvt) Ltd | எமது நகராட்சி மன்ற பிரிவுகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தனியார் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களுக்கான செப்ரெம்பர் 2022 மாத வேதனக் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 130,821.60 |
| **04** | October 04 | காந்தி சனசமூக நிலையம் | காந்தி சனசமூக நிலையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களின் செப்ரெம்பர் 01.09.2022 – 30.09.2022 வரையான காலப்பகுதிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 122,100.00 |
| **06** | October 06 | Valvai Seamen Welfare Association | வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தினர் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் நீச்சல் தடாக பராமரிப்பாளர் செப்ரெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கும் வகையில் | 35,000.00 |
| **07** | October 07 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 01.07.2022 – 30.09.2022 வரையான காலப்பகுதியல் வியாபார அனுமதிப்பத்திரங்கள் உழைப்பூதிய பற்றுச்சீட்டுக்கள், ஏனையவை என சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வையை மீளளிக்கும் வகையில் | 16,300.00 |
| **08** | October 08 | மருதா | தவிசாளரின் இறப்பர் முத்திரை செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,800.00 |
| **09** | October 09 | Asian Media Publication (Pvt) Ltd | வீதிகளுக்கு பெயர்ப்பலகை தயாரித்தலுக்கான கேள்வி அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரித்தமைக்கான கொடுப்பனவு முற்பணமாக வழங்கும் வகையில் | 5,625.00 |
| **10** | October 11 | சி.சர்மி (பயிலுனர்) | 2022 புரட்டாதி மாதத்திற்கான வேதனக் கொடுப்பனவு வழங்கப்படும் | 9,500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வகையில் | |
| 11 | October 13 | வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம் | 1. ரேவடி கால்வாய் வேலைக்கான பிடிபணம் விடுவிக்கும் வகையில் - 28,643.77<br>2. தெணிக்கிணறு நடைபாதை வேலைக்கான பிடிபணம் பிடிபணம் வழங்கும் வகையில் - 18,091.29<br>3. ஆதிகோவிலடி நடைபாதை வேலைக்கான பிடிபணம் வழங்கும் வகையில் - 18,910.44<br>4. கொம்மந்தறை வீதி வேலைக்கான பிடிபணம் வழங்கும் வகையில் - 30,370.19 | 96,015.69 |
| 12 | October 14 | Murali Building & Civil Construction | தீருவில் சுற்றுமதில் அமைத்தல் - 13,100.00, ஆற்றங்கரை நடைபாதை அமைத்தல் - 5,750.00, ஆதி கோவில் வாய்க்கால் அமைத்தல் - 6,500.00, தீருவில் விளையாட்டு உபகரணம் பொருத்துதல் - 1,650.00 வேலைகளுக்கான கேள்வி வைப்பு வழங்கும் வகையில் | 27,000.00 |
| 13 | October 15 | Semmeen Community Center | ஞானவைரவர் வீதி வேலைக்கான பிடிபணம் வழங்கும் வகையில் | 7,745.92 |
| 14 | October 16 | Vimal Construction | தீருவில் சுற்றுமதில் அமைத்தல் - 13,100.00, ஆற்றங்கரை நடைபாதை அமைத்தல் - 5,750.00, ஆதி கோவில் வாய்க்கால் அமைத்தல் - 6,500.00, தீருவில் விளையாட்டு உபகரணம் பொருத்துதல் - 1,650.00 வேலைகளுக்கான கேள்வி வைப்பு வழங்கும் வகையில் | 27,000.00 |
| 15 | October 17 | RK Architecture Designers & Engineers | தீருவில் சுற்றுமதில் அமைத்தல் - 13,100.00, ஆற்றங்கரை நடைபாதை அமைத்தல் - 5,750.00, ஆதி கோவில் வாய்க்கால் அமைத்தல் - 6,500.00, தீருவில் விளையாட்டு உபகரணம் பொருத்துதல் - 1,650.00 வேலைகளுக்கான கேள்வி வைப்பு வழங்கும் வகையில் | 27,000.00 |
| 16 | October 18 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 2022 ஆம் ஆண்டு மாட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட கேள்வித்தொகையினை செலுத்த தவறியதன் காரணமாக அவரினால் செலுத்தப்பட்ட கேள்வி வைப்புப்பணத்தினை வருமானத்திற்கு மாற்றும் வகையில் | 5,000.00 |
| 17 | October 19 | John Keels Office Automation (Pvt) Ltd | போட்டோ கொப்பி இயந்திரம் சேவிஸ் செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கும் வகையில் | 18,161.54 |
| 18 | October 21 | A.Mahenthiran | அலுவலக கதிரைகள் பின்னியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 21,225.00 |
| 19 | October 22 | i 7 Computers | HDMI Cable கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,000.00 |
| 20 | October 23 | இ.குபேந்திரன் | அலுவலக தேவைக்காக யாழ்ப்பாணம் சென்றமைக்கான பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 350.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| **21** | October 24 | M.Gajenthiran | இறப்பர் முத்திரை மற்றும் மை நிரப்பியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,800.00 |
| **22** | October 25 | ஐ.பிரசாந்தி | எமது நகராட்சி மன்றத்தின் 3 ஆம் காலாண்டிற்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் பங்குபற்றியோருக்கான உபசரணைச்செலவிற்கான கொடுப்பனவை மீளளிக்கும் வகையில் | 1,920.00 |
| **23** | October 26 | Jaffna District Co – operative Council | கடன் பதிவேடு அச்சடித்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,850.00 |
| **24** | October 27 | மு.சுஜாதா | 26.09.2022 அன்று நடைபெற்ற புறா எச்ச ஏல விற்பனையில் பங்குபற்றியோருக்கான உபசரணைச் செலவிற்கான கொடுப்பனவினை மீளளிக்கும் வகையில் | 790.00 |
| **25** | October 33 | பே.குகநேசன் (கணக்காளர்) | 22.08.2022 ஆம் திகதி தொடக்கம் 26.08.2022 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற Capacity Building Training Programme இல் பங்கு பற்றியமைக்கான பிரயாணக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 15,600.00 |
| **26** | October 34 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | சபை உத்தியோகத்தர், ஊழியர்களுக்கான ஆவணி, புரட்டாதி மாதங்களிற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 12,585.40 |
| **27** | October 35 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 2021 ஆண்டு அஞ்சல் கட்டணத்திற்காக சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் ஒதுக்கிய தொகையில் எஞ்சிய தொகையினை திரண்ட நிதிக்கு மாற்றும் வகையில் | 1,420.00 |
| **28** | October 36 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 2021 ஆம் ஆண்டு சட்டத்தரணி கொடுப்பனவிற்காக சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் ஒதுக்கிய தொகையில் எஞ்சிய தொகையினை திரண்ட நிதிக்கு மாற்றும் வகையில் | 20,000.00 |
| **29** | October 37 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 2021 ஆம் ஆண்டு தாய்மார் நலன்புரிக்காக சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் வைப்பிலிடப்பட்ட தொகையினை திரண்ட நிதிக்கு மாற்றும் வகையில் | 100,000.00 |
| **30** | October 38 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 2021 ஆம் ஆண்டு பாலுணவு, மருந்துவகை, சேய் பராமரிப்பிற்காக சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் வைப்பிலிடப்பட்ட தொகையினை திரண்ட நிதிக்கு மாற்றும் வகையில் | 100,000.00 |
| **31** | October 40 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 2021 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மாதத்திற்காக சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் வைப்பிலிடப்பட்ட தொகையினை திரண்ட நிதிக்கு மாற்றும் வகையில் | 100,000.00 |
| **32** | October 43 | Emerald Hardware Stores | 1. மீன்சந்தை பொது மலசலகூடம் திருத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 3,880.00<br>2. மீன்சந்தை பொது மலசலகூடம் திருத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான | 26,620.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 2,710.00<br>3. காரியாலய மின்குமிழ், மின்விசிறி திருத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 11,750.00<br>4. அலுவலகத்திற்கு குடிநீர் பெற்றுக் கொள்ளல் செயற்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 8,280.00 | |
| **33** | October 47 | Ponnoli Community Center | செல்வச்சந்திதி ஆற்றங்கரை நடைபாதை அமைத்தல் வேலைக்கான பிடிபணம் வழங்கும் வகையில் | 26,327.25 |
| **34** | October 48 | முகாமையாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம் | நகராட்சி மன்றப் பிரிவுகளின் 2022 ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்திற்கானதொலைபேசிப்பட்டியல் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>0212265622 – 790.36<br>0212265344 – 2,914.87<br>0213154453 – 1,972.39<br>0212263973 – 2,392.79<br>0212265166 – 2,644.57<br>0212263170 – 2,843.92<br>0212265611 – 1,460.79<br>0212265610 – 1,158.96 | 16,178.65 |
| **35** | October 49 | City Hardware & Stores | LM – 4627 இலக்க Water Bowser இற்கு Ball Value கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 31,920.00 |
| **36** | October 50 | பொது முகாமையாளர், MPCS, உடுப்பிட்டடி | உள்ளூராட்சி வார விளையாட்டு நிகழ்விற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபசரணைச் செலவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 7,825.00 |
| **37** | October 51 | New Lanka Food city & Grocery (Pvt) Ltd | உள்ளூராட்சி வார விளையாட்டு நிகழ்விற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபசரணைச் செலவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,740.00 |
| **38** | October 52 | Lanka Filling Station | LM – 3851 இலக்க Gally Bowser இற்கு Oil கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 7,500.00 |
| **39** | October 53 | முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | 2022 ஒக்டோபர் மாதத்திற்கான பஸ்தரிப்பட நீர்ப்பாவனைக்கான நீர்வழங்கல் பட்டியல் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 345.00 |
| **40** | October 54 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 01. 2022 ஆம் ஆண்டிற்கான வருமான பரிசோதகர்களுக்கான கோலவுடைக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் (சி.யோகலிங்கம், க.சிவரஞ்சன்) – 30,000.00<br>02. பொதுச்சுகாதார பரிசோதகரின் ஆவணி, புரட்டாதி மாதங்களிற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 19,048.75 | 74,052.28 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 03. சபை உத்தியோகத்தர், ஊழியருக்கான சந்நிதி உற்சவ காலத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 25,008.03 | |
| 41 | October 55 | Chithamparappillai Book Dept | 1. கொள்வனவு செய்யப்பட்ட பந்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 3,000.00<br>2. கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகளிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 10,050.00<br>3. கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகளிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 1,500.00 | 14,550.00 |
| 42 | October 56 | Asian Media Publication (Pvt) Ltd | LDSP - PT2 வேலைத்திட்டத்தின் கீழ் ரேவடி மீன் சந்தை இணைப்பு வீதி புனரமைப்பு வேலை தொடர்பாக தினக்குரல் பத்திரிகையில் விளம்பரம் செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 9,000.00 |
| 43 | October 57 | Ark Enterprises (Pvt) Ltd | கொள்வனவு செய்யப்பட்ட Sprig Pipe இற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 44,000.00 |
| 44 | October 58 | Nalin Information Techonologies (Pvt) Ltd | கணணி திருத்தத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,000.00 |
| 45 | October 59 | பா.அகர்ஷன் | 10.10.2022 – 25.10.2022 வரையான காலப்பகுதிக்கு ஆதனவரி நிலுவை அறவீடு செய்தமைக்கான தரகுப்பண கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 40,128..50 |
| 46 | October 60 | Chithamparappillai Book Dept | கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகளிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 74,960.00 |
| 47 | October 61 | பொது முகாமையாளர், MPCS, உடுப்பிட்டடி | உள்ளூராட்சி வார விளையாட்டு நிகழ்விற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபசரணைச் செலவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 5,147.00 |
| 48 | October 62 | Advance Techonology Systems | கணணி திருத்தத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,600.00 |
| 49 | October 63 | S.Vasanthathevy | புல்வெட்டும் இயந்திரம் திருத்தியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 44,000.00 |
| 50 | October 64 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 1. பொதுச்சுகாதார பரிசோதகர் 17.08.2022, 08.09.2022, 21.09.2022 ஆகிய திகதிகளில் தொண்டமானாறு தெற்கு, கெருடாவில் தெற்கு, சந்திதி கோயில் ஆகிய இடங்களிற்கு சென்றமைக்கான பிரயாணக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 1,316.00<br>2. கொள்வனவு செய்யப்பட்ட சீனிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 777.00 | 2,093.00 |

| தொ.இல | உ.சீ.இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1 | Nithi Fruit Plant Nursery | கொள்வனவு செய்யப்பட்ட மரக்கன்றுகளுக்கான (மிளகாய் - 80) கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 32,000.00 |
| 2 | 2 | Abi Agro Seeds Product | கொள்வனவு செய்யப்பட்ட விதைகளுக்கான (சிறகவரை – 40, கீரை – 40, பயிற்றை – 40, பாகல் - 40, புடோல் - 40, வெண்டி - 40) கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 40,000.00 |
| 3 | 3 | டி.பிறேமதர்சினி | இடர்கடன் வழங்கும் வகையில் | 15,000.00 |

முன்மொழிந்தவர் : திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிந்தவர் : திரு.மு.ஆனந்தராசா

**தீர்மான இல :1215/29.11.2022**

**சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளுக்கான விருது வழங்கல் விழாவிற்கு செல்வதற்கான கொடுப்பனவு அனுமதி:**

2020 ஆம் ஆண்டின் பொது நிறுவனங்களுக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளுக்கான விருது வழங்கல் விழாவில் சபையின் கௌரவ தவிசாளர், மற்றும் செயலாளர் கலந்து கொள்ளவுள்ள நிலையில் அவ்விழாவில் பங்குபற்றுவதற்கான கொடுப்பனவு ரூபா 2,500.00 இனை சபைநிதியில் வழங்க அனுமதிப்பதென சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி

**தீர்மான இல :1216/29.11.2022**

**வகைமாற்றம்**

2022 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் பின்வரும் தலைப்புக்களில் ஒதுக்கீடானது பற்றாக்குறையாக உள்ளமையால் அதனை பின்வரும் வகையில் வகைமாற்றம் செய்ய அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| சேமிப்பு தலைப்பு (தற்போதைய மீதி) | செலவின தலைப்பு (தற்போதைய மீதி) | மாற்றவேண்டிய தொகை |
|---|---|---|
| 6-2-431<br>எழுதுகருவிகளும் பணிமனைத்தேவைப் பொருட்களும்<br>**25,000.00** | 6-2-438<br>ஏனைய பத்திரிகை சஞ்சிகைகள்<br>**8,910.00** | **18,000.00** |
| 1-1-424<br>பயணச் செலவு (கடமை)<br>**17,239.00** | 1-3-459(அ)<br>நடுக்கட்டு உத்தியோகத்தர் தரகு<br>**17,516.12** | **10,000.00** |
| 1-3-424<br>பயணச் செலவு (கடமை)<br>**28,030.00** | | **20,000.00** |

| | | |
|---|---|---|
| 2-1-424<br>பயணச் செலவு (கடமை)<br>**28,244.00** | | **20,000.00** |
| 2-5-437<br>சீருடைகள், தையல் கட்டணங்கள், மழை மேலங்கி, காலணி<br>**12,000.00** | | **10,000.00** |
| 5-2-412<br>மேலதிக வேதனம் (சந்நிதி உற்சவ கால கடமைக்கானது)<br>**259,938.32** | 2-5-441(1)<br>வாகனங்களைப் பழுது பார்த்தலும் பேணலும்<br>**34,808.41** | **150,000.00** |
| 3-3-444<br>வீதிகள் மதகுகள், வீதி விளக்குகள் பழுதுபார்த்தலும் பேணலும்<br>**365,200.00** | | **150,000.00** |

முன்மொழிந்தவர்:- திரு.பா.ஜெகன் வழிமொழிந்தவர்:-திரு.அ.சதீஸ்வரன்

**தீர்மான இல :1217/29.11.2022**

**நாட்குறிப்பு**

ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு.S.நாகராசா இடர்கடன் நிலுவை 2021 ம் ஆண்டு ஓய்வூதியத்திணைக்களத்தினால் நேரடியாக மக்கள் வங்கிக்கணக்கில் வைப்புச்செய்யப்பட்டது. இது நிலையான வைப்பு வட்டி வருமானமாக கடந்த ஆண்டு பதியப்பட்டுள்ளது. இத்தவறினை சீராக்கம் செய்வதற்கான நாட்குறிப்பினை அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| | நாட்குறிப்பு 2022 | | | |
|---|---|---|---|---|
| திகதி | நாட்குறிப்பு இலக்கம் | விபரம் | வரவு | செலவு |
| 11.11.2022 | 02 | திரண்ட நிதிக்கணக்கு வரவு<br>பதவியினர்கடன் கணக்கு செலவு<br><br>(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு.S.நாகராசா என்பவரது இடர்கடன் நிலுவை 2021ம் ஆண்டு ஓய்வூதியத் திணைக்களத்தினால் நேரடியாக மக்கள் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. இது நிலையான வைப்பு வட்டி வருமானமாக கடந்த ஆண்டு பதியப்பட்டுள்ளது. இத்தவறினை சீர்செய்த வகையில்) | 127,000.00 | 127,000.00 |

முன்மொழிந்தவர் : திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிந்தவர் : திரு.மு.ஆனந்தராசா

**தீர்மான இல :1218/29.11.2022**

**தொண்டைமானாறு திண்மக்கழிவகற்றல் பிரதேசத்திற்குரிய காணியினை சுவீகரிப்பு செய்வதற்கான அனுமதி**

தொண்டைமானாறு திண்மக்கழிவகற்றல் பிரதேசத்திற்குரிய ஏறத்தாழ நான்கு பரப்பு காணியானது நீண்ட காலமாக நகராட்சிமன்றத்தின் பயன்பாட்டிற்குரியதாக காணப்பட்டாலும் ஆதன உரிமை இல்லாத காரணத்தினால் அக்காணியினுள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுவதால் அப்பிரதேசத்தினை நகராட்சிமன்றத்தினால் சுவீகரிப்பு செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் : திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர் : திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல :1219/29.11.2022**

**மயானங்களுக்கான குழுக்களை அமைத்தலும், கட்டணங்களை அறவிடலும் :**

வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் காணப்படுகின்ற மயானங்களை சார்ந்த பிரதேசத்தின் மக்கள் கிராமசேவகர், மற்றும் சனசமூக நிலையங்கள் உள்ளடங்கலான பொது அமைப்புக்கள் போன்றவற்றுடன் கலந்துரையாடி மயானங்களுக்கான குழுக்களை அமைப்பதுடன் மயானங்களுக்கான கட்டணங்களை அறவிடுதல் தொடர்பாகவும் தீர்மானிக்கலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் : திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர் : திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1220/29.11.2022**

**வல்வெட்டித்துறை மீன்சந்தை மற்றும் மரக்கறிச்சந்தைகளில் வியாபாரிகளிடமிருந்து அறவிடப்படும் தொகையிலும், அங்குள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்படுகின்ற வாகனங்களுக்கு அறவிடப்படும் தொகையிலும் மாற்றம் செய்தல் :**

வல்வெட்டித்துறை மீன்சந்தை மற்றும் மரக்கறிச்சந்தைகளில் **6’** நீளமும், **3’** அகலமும் கொண்ட பரப்பளவுள்ள ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அறவிடப்படுகின்ற வாடகைத்தொகையினை **10%** ஆல் அதிகரிப்பதுடன், அங்குள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்படுகின்ற வாகனங்களுக்கு பின்வரும் வகையில் கட்டணங்களை அதிகரித்து அறவிடலாமென சபையினால் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

- துவிச்சக்கரவண்டி - ரூபா 10.00
- மோட்டார் சைக்கிள் - ரூபா 20.00
- முச்சக்கரவண்டி - ரூபா 25.00
- கார் / வான் - ரூபா 50.00
- கூலர் - ரூபா 100.00

முன்மொழிந்தவர் : திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர் : திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல :1221/29.11.2022**

**வெளிவாரி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கூறுவிலை கோரல் :**
நகராட்சிமன்றத்தில் ஒப்பந்த அடிப்படையில் சனசமூக நிலையங்களினூடாக கூறுவிலை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வெளிவாரி பணியாளர்களின் ஒப்பந்த காலமானது எதிர்வரும் 2022.12.31 ஆந் திகதியுடன் முடிவடைவதனால் 2023 ஆம் ஆண்டிற்கும் தற்போதைய பொருளாதார மற்றும் எரிபொருள் பிரச்சனைகளை கருத்தில் கொண்டு சபைக்கு மேலதிகமான செலவீனத்தை ஏற்படுத்தாது கடந்த காலத்தைப் போன்று இம்முறையும் சனசமூக நிலையங்களிடமிருந்து வெளிவாரி பணியாளர்களிற்கான கூறுவிலையினை கோருவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் : திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர் : திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1222/29.11.2022**

**ஆதன வரிக்கான K form விநியோகிப்பதற்கான கொடுப்பனவு தொடர்பான அனுமதி.**

நாட்டின் அசாதாரண சூழ்நிலையினால் எரிபொருளின் விலை அதிகரிப்பினை கருத்திற்கொண்டு ஆதன வரிக்கான K form விநியோகிப்பதற்கான கொடுப்பனவுத் தொகையை அதிகரிக்கக் கோரிய நடுக்கட்டு உத்தியோகத்தரின் கோரிக்கைக்கமைவாக K form விநியோகித்தல் கட்டணத்தினை ரூபா 5.00 இலிருந்து 20.00 ரூபாவாக அதிகரிப்பதற்கு அனுமதியளிப்பதெனவும் அதற்கான அனுமதியை உரிய படிமுறைக்கு ஊடாக கௌரவ ஆளுநரிடம் பெற்று நடைமுறைப்படுத்துவதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிந்தவர்:- திருமதி.கு.இராஜேஸ்வரி

**தீர்மான இல :1223/29.11.2022**

**பொலிகண்டி மீன் வாடிகளில் வெளியிடத்து மீன்களை விற்பதற்கு தடை விதித்தல்**
பொலிகண்டி மீன் வாடிகளில் வெளியிடத்திலிருந்து வருகின்ற மீன்களை எடுத்து விற்பதனால் அத்துறை சார்ந்த மீனவர்கள் பாதிக்கப்படுவதன் காரணமாக வாடிகளில் வெளியிடத்து மீன்களை விற்பதற்கு தடை விதிப்பதுடன் அவர்கள் அம்மீன்களை மீன்சந்தையில் வைத்து விற்பனை செய்வதற்கான அனுமதியனை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1224/29.11.2022**

**LDSP திட்டத்தின் கீழ் திட்ட முன்மொழிவுகளுக்கான அனுமதி :**
LDSP திட்டத்தின் கீழ் 30 மில்லியன் தொடக்கம் 40 மில்லியன் வரையில் நகரசபைக்கு சொந்தமான நிலங்களில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு பின்வரும் இரண்டு திட்ட முன்மொழிவுகளையும் சமர்ப்பிப்பதற்கு அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

- தொண்டைமானாறு திண்மக்கழிவகற்றல் பிரதேசத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு ஏதுவாக களஞ்சிய அறை ஒன்றினை அமைத்தலும், உற்பத்தி தொடர்பான வேலைகளைச் செய்வதற்கு கட்டடத் தொகுதி ஒன்றினை அமைத்தலும் -BT
- வல்வெட்டித்துறை நீச்சல் தடாக வளாகத்தில் கடைத்தொகுதி ஒன்றினை அமைத்தல் -PT
- வல்வெட்டித்துறை மீன்சந்தையின் ஒரு பகுதியில் குளிரூட்டல் அறை அமைத்தல் -PT
- முன்பள்ளி சிறார்களிற்கான சத்துணவு வழங்குதல்.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.கைலாஜினி வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1225/29.11.2022**

**வல்வெட்டித்துறை மாட்டிறைச்சிக்கடைக்கான கொல்கள பாவனைக்கான ஒப்பந்தம் :**

வல்வெட்டித்துறை மாட்டிறைச்சி கடையினை சுகாதார நடைமுறைகளுக்கமைவாக இயக்குவதன் பொருட்டு வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்கு உடைமையாக கொல்களம் இல்லாததால் மாட்டிறைச்சி கடையினை இயக்குதல் தொடர்ச்சியாக பருத்தித்துறை மருத்துவ அதிகாரியால் (MOH) கேள்விக்குட்படுத்தப்படுவதால் கரவெட்டி பிரதேச சபையின் கொல்களத்தினை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தினை அவர்களுடன் மேற்கொள்வதற்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1226/29.11.2022**

**Village Hotel இன் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகள் குறித்து கடிதம் அனுப்புதல் :**

Village Hotel தொடர்பான வருமான வரிப்பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரின் அறிக்கை மற்றும் செயலாளரின் அறிக்கைகளின் படி குறித்த நிபந்தனைகளை பூர்த்திசெய்கின்ற பட்சத்தில் அவர்களுக்கான வியாபார அனுமதியினை வழங்க முடியுமென கடிதம் மூலம் அவர்களுக்கு அனுப்புவதெனவும், அதற்கான பதிலை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டுமெனவும், அதன் பின் தொடர்நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.மு.ஆனந்தராசா

**தீர்மான இல :1227/29.11.2022**

**வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட கோழியிறைச்சிக்கடை மற்றும் மாட்டிறைச்சிக்கடைகளுக்கான கட்டண அறவீடு :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட கோழியிறைச்சி மற்றும் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு குத்தகை அறவீட்டிற்கு மேலதிகமாக மாதாந்த வாடகையாக ரூபா 100.00 இனை அறவிட்டுக் கொள்வதற்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.து.ஸ்ரீதரன் வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி

**தீர்மான இல :1228/29.11.2022**

**நந்தவனம் கடைத்தொகுதியின் மாதவாடகையின் மீள்மதிப்பீடு தொடர்பானது :**

59ஆவது சபைக்கூட்டத்தின் 1206/21.10.2022 ஆம் இலக்க தீர்மானத்தின் படி, நந்தவனம் கடைத்தொகுதியின் மாதவாடகை வேறுபாடு தொடர்பாக விளக்கம் கோரி அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிய கடிதம் தொடர்பான பதிலானது அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டு அதில் பழைய பெறுமதியே மாதவாடகையாக (ரூபா 28,300.00 இனை) அறவிடும் படி குறிப்பிடப்பட்டுள்ளமையினால் அப்பெறுமதியினையே அறவிடுவதெனவும், வாடகைப்பெறுமதி மாற்றங்களுக்கான விளக்கத்தினை தரும்படி மீள கடிதம் அனுப்புவதெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.இ.அன்ரநற் சுபாசினி வழிமொழிந்தவர்:-திரு.ம.மயூரன்

**தீர்மான இல :1229/29.11.2022**

